# புகழ்ச்சிக்கூட்டநற்செய்தி

2017 ஆடி மாதம் 31ம் திகதி முதல் ஆவணி மாதம் 05ம் திகதி வரை

## *"ஏழைகளின் ஆன்மீகத்திற்குள்ளாகுவதற்கு ஆண்டவர் எம்மை அழைக்கின்றார்"*

01. புகழ்ச்சிக்காக

- ஆண்டவர் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். (புனித லூக்கா 1:48)
- பாக்கியவதியான அம்மாவின் புகழ்ச்சியின் தலைப்பாகியது, தாழ் நிலை நின்றவரை உயர்த்திய இறைவன் ஆண்டவரே. ஆண்டவரது பரிசுத்தமான திருவிருப்பத்தினை பெருமைபடுத்தியவாறு நாமும் தேவதாயுடன் இணைந்து புகழ்வோம்.
- புபுது பாடல் இல 229 "என் ஆன்மா ஆண்டவரை……"

02. கடந்த வார அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வோம்.

- மனம் வருந்தி இறைஆண்டவர் பக்கம் திரும்புவோம். ஏனெனில் இறைஅரசு, தாழ்நிலையினரின் உள்ளத்தின் நிலைப்பாட்டின் வழியாக உரிமையாகிறது. மேலும் இறைஅரசின் பெறுமதியினூடாக வாழ்வதும் மற்றும் சாட்சிபகர்வதன் வழியாகவுமே.
- உங்கள் அனுபவத்தை பொதுவில் பகிரவும்.

03. வாரத்திற்கான நற்செய்தி (பரிசுத்த ஆவியானவர் திருவிழாவின் தலைப்புரையை முன்கொண்டு)

- ஒரு நாள் மிகவும் களைப்புடன் வீடுசென்றேன். ஆகையால் நான் எனக்கே கூறிக்கொண்டேன் நான் இப்பொழுது நல்ல நித்திரைக்கு செல்லவேண்டுமென்று. இப்பொழுதென்றால் யாராவது (வெளிக்கதவு) கேட்டின் அருகில் வந்து தட்டினால் நான் கதவை திறக்கமாட்டேன் என்று. அந்நேரமே யாரோ ஒருவர் கேட்டைத் தட்டினார்கள். நான் இயேசுக்கிறிஸ்துவுக்கு சொன்னேன், என்னால் இப்பொழுது அங்கு செல்ல முடியாது முடியாது என்று. உடனடியாக அவர் எனக்கு பதிலொன்று தந்தார். ரஞ்சனா அங்கு நின்றுகொண்டிருப்பது நான் என்று. நான் உடனே கேட்டினருகில் சென்றேன். அம்மா ஒருவர். அவர் கூறினார், 'எனது மகனுக்கு பரீட்சைக்கு செல்ல பணம் இல்லை' என்று நான் வந்து எனது பையிலிருந்து காசு அனைத்தையும் எடுத்து ஒரு கடித உரையிலிட்டு அவரிடம் கொடுத்தேன். அக்கணம் அந்த கேட்டினருகில் நான் இயேசுக்கிறிஸ்துவை சந்தித்தேன்.
- மேற் குறிப்பிட்ட வெளிப்பாட்டின் வழியாக தூய ஆவியானவர் உங்களுக்கு, எனக்கு என்ன கூறுகின்றார்? அவருடைய குரலுக்கு செவிகொடுத்தவாறு சிலருடன் அதனைப் பகிர்ந்துகொள்ளவும்.

04. வார்த்தையின் ஊழியருக்காக (உரோ 14 :22)

“தேர்ந்து தெளிந்து எடுத்த முடிவைச் செயல்படுத்தும் போது மனச்சான்றின் உறுத்தலுக்கு ஆளாகாதோர் பேறுபெற்றோர்”

- மனச்சாட்சி என்பது இறைவனின் ஒலி இறையொலியினூடாக ஆண்டவரின் பரிசுத்தமான திருவுளம் எமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஏழைகளின் ஆன்மீகத்திற்கு உள்ளாகிட அவர்களுடன் ஒன்றுபட்டிட ஆண்டவர் எமக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கின்றார்.
- நாம் தேடும் மீட்பு, சமாதானம், மகிழ்ச்சி, விடுதலை மனித விருப்பத்தின் வழியாக உலகத்தினூடாக பெற்றிட முடியாது. நாம் எதிர்பார்க்கும் இறைஅரசை நோக்கி நெருங்கிட முடியுமாவது அவரது பரிசுத்த திருவிருப்பத்தை நிறைவேற்றுதலின் வழியாகவே.
- ஏழைகள், ஏழைகளாவது ஆண்டவருக்கு விருப்பமானகாரியமல்ல. ஏனெனில் அவர்கள் பலவிதங்களில் குடும்பத்தில், சமூகத்தில் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் தாழ்நிலையிலுள்ளோரை உயர்த்தும் ஆண்டவர், ஏழைகளுக்காக ஏழைகளாவதற்காக, ஏழைகளுடன் சங்கமாகிட எமக்கு அழைப்புவிடுக்கிறார்.

05. இறுதிச்செபம்

- ஏழையாக எமது மத்தியில் வந்துதித்து விண்ணக உரிமையை பெற்றிட எமக்கு முன்மாதிரிகையை காண்பித்த தர்மமானவரை நாம் புகழ்வோம்.
- ஏழ்மையின் ஆன்மிகதிற்கு உள்ளாகிட ‘என் பின்னே வாருங்கள்’ என்று நாம் பெற்ற அழைப்பினைக் குறித்து அவரைப் புகழ்வோம்.
- கிது தன புபுதுவையின் ஆன்மீகத் தந்தையாகிய சுவாமி அப்பா வாழ்ந்திடும் வாழ்க்கை அனுபவத்தை முன்னொண்டு ஆண்டவரைப் புகழ்வோம்.
- உண்மையான மனம்வருந்துதலுக்கு எம்மை எடுத்துச் செல்லுமாறு கூறி பரிசுத்த ஆவியானவரிடம் மன்றாடுவோம்.